13.01.16

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பவானிசாகர் அணையில் இன்று முதல் தண்ணீர் திறப்பு: முதல்வர்



ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து இன்று முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

திட்ட பிரதானக் கால்வாய் மற்றும் நீட்டிப்பு கால்வாய் இரட்டைப்படை மதகுகள், சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் கீழ் பாசனம் பெறும் நிலங்களுக்கு, தண்ணீர் திறந்துவிடும் படி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

அதன்படி பவானிசாகர் அணையில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

**உரங்கள் மற்றும் ரசாயனத் தயாரிப்பு நிறுவனத்தில் பணி**

கேரள உரங்கள் மற்றும் ரசாயனத் தயாரிப்பு நிறுவனமான FACT நிறுவனத்தில் காலியாக உள்ள டெக்னீசியன் பணியிடங்களை நிரப்ப தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் 16 ஆம் தேதி நடைபெறும் எழுத்துத் தேர்வில் நேரில் கலந்துகொள்ளலாம்.

**பணி: Technician**

காலியிடங்கள்: 30

தகுதி: சிவில், மெக்கானிக்கல், எலக்ட்ரிகல், கெமிக்கல் ஆகிய பொறியியல் படிப்புகளில் டிப்ளமோ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: 23-க்குள் இருக்க வேண்டும்.

**பணி: Trade Apprentice**

காலியிடங்கள்: 76

தகுதி: வெல்டிங், எலக்ட்ரீசியன், கார்பெண்டர் ஆகிய படிப்புகளில் ஐடிஐ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: 23-க்குள் இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தகுதிவாய்ந்த நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

விண்ணப்பிக்கும் முறை: இந்த பதவிகளுக்கு முன்கூட்டியே விண்ணப்பிக்கத் தேவையில்லை.

எழுத்துத் தேர்வு நடைபெறும் நாளில் அசல் சான்றிதழ் மற்றும் அதன் நகல் ஆகியவற்றைக் கொண்டு வர வேண்டும்.

மேலும் முழுமையான விவரங்கள் அறிய www.fact.co.in என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

தேர்வு நடைபெறும் தேதி: 16.01.2016

### நெல் கொள்முதல் நிலையங்களில் 20% வரை ஈரப்பதத்தை அனுமதிக்க வலியுறுத்தல்

காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள அரசு நேரடி கொள்முதல் நிலையங்களில் 20 சதம் வரை ஈரப்பதம் அனுமதிக்க வேண்டும் என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஏ.ஐ.டி.யு.சி. தொழில் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலர் சி. சந்திரகுமார் தெரிவித்திருப்பது:

மழை, பனிப்பொழிவு காலங்களில் அறுவடை செய்யும் நெல்லில் ஈரப்பதம் 17 சதத்துக்குள் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. இந்நிலையில் ஒவ்வொரு ஆண்டும் இந்த பிரச்னையால் சாலை மறியல் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படும் பகுதிகளுக்கு மட்டும் இணக்கமாகக் கொள்முதல் செய்ய வாய்மொழியாக உத்தரவு வழங்கப்படுகிறது.

எவ்வளவு ஈரப்பதம் இருந்தாலும் 17 சதம் எனக் குறிப்பிட்டு கொள்முதல் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆய்வு செய்ய வரும் அலுவலர்கள் ஈரப்பதம் அதிகமாக இருப்பதாகத் தெரிவித்து, கொள்முதல் பணியாளர்களுக்குப் பல்லாயிரக்கணக்கில் இழப்புத் தொகை விதிக்கின்றனர்.

இதனால், ஈரப்பதத்துக்கு ஏற்ப விவசாயிகளிடம் பணம் பிடித்தம் செய்வது கைவிடப்படுவதால், அரசுக்கும் லட்ச கணக்கில் இழப்பு ஏற்படுகிறது. எனவே, விவசாயிகளின் நலன் கருதி கடந்த ஆண்டு

செயல்பட்ட அனைத்து கொள்முதல் நிலையங்களையும் உடனடியாக திறக்க வேண்டும். மேலும், 20 சதம் ஈரப்பதம் வரை உள்ள நெல்லை கொள்முதல் செய்ய அனுமதி வழங்க வேண்டும்.

## இயற்கை வேளாண்மையில் ஆர்வம் காட்டும் பட்டதாரி இளைஞர்கள்!

பட்டப் படிப்பை முடித்துவிட்டு, பல்வேறு பணிகளில் இருந்த இளைஞர்கள் அதை விட்டுவிட்டு, தற்போது இயற்கை வேளாண்மையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இயற்கையோடு ஒன்றிணைந்து தாங்களே உருவாக்க வேண்டும் என்ற லட்சியப் பயணத்தை தொடங்கிய பெரம்பலூர் மாவட்ட இளைஞர்கள் சிலர், பொங்கல் பண்டிகையைக் கொண்டாட பாரம்பரிய சீரக சம்பா நெல் பயிரை அறுவடை செய்து தங்களது வெற்றிப் பயணத்தை தொடங்கியுள்ளனர்.

கையில் அரிவாளுடன் நெல் கதிர்களை நேர்த்தியான முறையில் அறுவடை செய்து வரும் இவர்கள், பொறியியல், கலை மற்றும் அறிவியல், தொழில் பயிற்சி என பட்டப் படிப்பு பயின்று பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றி, எதிலும் கிடைக்காத ஓர் ஆத்ம திருப்தி, நம்மாழ்வாரின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இயற்கை வேளாண்மையில் கிடைப்பதாகக் கூறுகின்றனர்.

நம்மாழ்வாரின் கருத்துகள் பலரை இயற்கை வேளாண்மைக்கு அழைத்துச் சென்றது உண்மை என்றால், அவரது மறைவு பெரம்பலூர் மாவட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது என்றே கூறலாம்.

நம்மாழ்வாரின் கருத்துகளில் ஈடுபாடு கொண்ட ரமேஷ் கருப்பையா எனும் தனி மனிதனால், இன்று பெரம்பலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இயற்கை வேளாண்மையில் இளைஞர்கள் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒரு காலத்தில் இயற்கை வேளாண்மையை மட்டுமே பயன்படுத்தி வந்த நம் முன்னோர்கள், இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தனர். பாரம்பரியமாக விவசாயம் செய்த மண்ணில், என்று ரசாயன உரங்கள் கலக்க

ஆரம்பித்தனவோ அன்றே மனித இனம் மெல்ல அழிவை நோக்கி நகரத் தொடங்கியது.

நாட்டு மாடு, சாணம், உரம், பூச்சி, எலி, பாம்பு, விவசாயம் கால்நடைத் தீவனம், பால் என இருந்த இயற்கை சுழற்சி முறை முற்றிலும் மாறி, தற்போது ரசாயன உரத்தில் தொடங்கி, குழந்தைகள் முதல் அனைவரும் பருகும் பால் வரை மறைமுக விஷத்தை நாம் விரும்பாவிட்டாலும் அருந்த வேண்டிய கட்டாய நிலையில் இருக்கிறோம் என்றார் ரமேஷ் கருப்பையா.

மீண்டும் இயற்கை வேளாண்மையை நிலைநாட்ட வேண்டும் என்ற முனைப்போடு பெரம்பலூர் மாவட்டம் முழுவதும் 50-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பாரம்பரிய நெல்லான சீரக சம்பா நெல் வகையைப் பயிரிட்டு பாதுகாத்து வருகின்றனர்.

அந்த வகையில், பெரம்பலூர் - துறையூர் சாலையில் உள்ள நிலத்தில் இயற்கை வேளாண்மை முறையில் சீரக சம்பா பயிரிட்டுள்ள பட்டதாரி இளைஞர் சதீஷ், தற்போது நெல் அறுவடைப் பணியை மேற்கொண்டு வருகிறார்.

விதை நேர்த்தி முறையில் சாகுபடி செய்யப்பட்டு, இதுவரை எந்தச் செலவும் செய்யாமல் அதிகப்படியான லாபத்தை ஈட்டியுள்ளதாகவும், இயற்கைச் சூழலுக்கு ஏற்ப எலியைக்கூட விரட்ட முயற்சி செய்யாததால் அதுவே இரட்டிப்பு பலன் என்பதோடு, நாம் உண்ணும் உணவைத் தாங்களே தயாரிக்கும் எண்ணம் அனைவருக்கும் வந்தால் அதுவே இயற்கை வேளாண்மையின் வெற்றி என்றார் சதீஷ்.

பெரம்பலூர் மாவட்ட இளைஞர்களிடையே இயற்கை வேளாண்மை ஒரு மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. விரைவில் இயற்கை வேளாண்மையில் மாநிலத்தில் பெரம்பலூர் முதன்மை மாவட்டமாக மாறும் என்றார் பன்னாட்டு நிறுவனப் பணியை விட்டு, இயற்கை வேளாண்மையில் இறங்கியுள்ள நக்கசேலம் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஆர். மாதேஷ்வரன்.

வரும் பொங்கல் பண்டிகையின்போது, இயற்கை வேளாண்மை மூலம் தாங்களே உற்பத்தி செய்த பாரம்பரிய நெல் மூலம் தங்களது குடும்பத்தினருடன் பொங்கல் விழாவைக் கொண்டாடும் மகிழ்ச்சியில் உள்ளனர் பெரம்பலூர் மாவட்ட இளைஞர்கள்.

## இரும்பு சல்பேட் பயன்படுத்தும் கரும்பு விவசாயிகளுக்கு மானியம்

இரும்பு சல்பேட் உப்பு பயன்படுத்தும் கரும்பு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும் என வேளாண்மைத்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கடலூர் மாவட்ட வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் ஏறத்தாழ 30 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 80 சதவீதம் நடவுப் பயிராகவும், 20 சதவீதம் மறுதாம்பு பயிராகவும் சாகுபடி செய்யப்படுகிறது.

பயிர் வளர்ச்சிக்குத் தேவையான 16 சத்துகளில் நுண்ணூட்டச் சத்து முக்கியமானது.

குறிப்பாக இரும்புச் சத்தானது இலைகளில் பச்சையம் உருவாகவும், இதன்முலம் பயிருக்கு தேவையான உணவை ஒளிச் சேர்க்கையின் மூலம் தயாரிக்கவும் பயன்படுகிறது. சாகுபடி செய்யும் நிலங்களில் சுண்ணாம்பு களர்த்தன்மை இருப்பின் இரும்புச் சத்து பற்றாக்குறை ஏற்பட்டு, இலைகள் வெளிறி மஞ்சள் நிறமாகும். குறிப்பாக மறுதாம்பு கரும்பில் இந்த அறிகுறிகள் அதிகம் தோன்றும்.

இதற்கு ஹெக்டேருக்கு 100 கிலோ வீதம் இரும்பு சல்பேட் (அன்னபேதி உப்பு) நிலத்தில் இடவேண்டும். மேலும் பாதிப்பு அதிகம் தென்பட்டால் ஒரு லிட்டர் நீரில் 10 கிராம் அன்னபேதி உப்பு கரைத்து கைத் தெளிப்பான் மூலம் இலையின் மேல் தெளிக்க வேண்டும். 15 நாள்கள் இடைவெளியில் மீண்டும் ஒருமுறை தெளிப்பு செய்ய வேண்டும்.

நடப்பாண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஹெக்டேருக்கு ரூ.500 மானியம் அளிக்கப்பட உள்ளதால், கரும்பு விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ, தனியார் விற்பனை நிலையங்களிலோ அல்லது சர்க்கரை ஆலையினர் மூலமோ இரும்பு சல்பேட் உப்பு வாங்கி பயன்படுத்திருப்பின், அதற்குரிய ரசீதை அருகிலுள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உரிய விண்ணப்பத்துடன் அளிக்க வேண்டும்.

அதிகபட்சம் ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் வரை மானியம் அளிக்கப்படும். இந்த மானியத் தொகை சம்மந்தப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

எனவே கரும்பு விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பலன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தை பல்கலை.யாக மாற்ற நடவடிக்கை: முதல்வர்

புதுச்சேரி குரும்பாபேட்டில் உள்ள காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தை பல்கலைக்கழகமாக மாற்ற முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக முதல்வர் ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

மத்திய வேளாண் அமைச்சகம் சார்பில் ஆப்கானிஸ்தான், வங்கதேசம், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வேளாண் துறை அதிகாரிகளுக்கு இந்திய விவசாய முறை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த டிசம்பர் 1ஆம் தேதி இந்தியா வந்த இக்குழுவினருக்கு குன்னூரைச் சேர்ந்த பேராசிரியர் ஐயங்கார் வேளாண் பயிற்சியை அளித்தார். தமிழகத்தில் ஊட்டி, கோவை, புதுச்சேரி கேவிகே பண்ணை (காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம்) உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வேளாண்மை குறித்து பயிற்சி பெற்றனர். அவர்கள் முதல்வர்

ரங்கசாமியை மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினர். இச்சந்திப்புக்குப் பிறகு முதல்வர் என்.ரங்கசாமி நிருபர்களிடம் கூறியது: அயல்நாடுகளில் உள்ள வேளாண் துறை அரசு அதிகாரிகள் இந்திய விவசாயம் குறித்து பயிற்சி பெறுவதற்காக இந்தியா வந்துள்ளனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்ற பிறகு புதுச்சேரி கேவிகே பண்ணைக்கு வந்துள்ளனர். அங்கு பார்வையிட்டு பயிற்சி பெற்ற பிறகு கேவிகே பண்ணையில் விவசாயம் நல்ல முறையில் இருப்பதாக பாராட்டியுள்ளனர். புதுச்சேரியில் அனைத்து வளமும் கொண்ட விவசாய மண் உள்ளது. கேவிகே பண்ணையை பல்கலைக்கழகமாக மாற்ற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்ட காரைக்கால் மீனவர்களை மீட்க மத்திய அரசை வலியுறுத்தியுள்ளோம். விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

மழை பாதிப்புக்கு கூடுதல் நிவாரணம் கேட்டு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளோம். மத்திய அரசும் அளிக்கும். கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள மீனவர் அங்காடி விரைவில் மீனவர் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கப்படும். மீனவர்களுக்கு கடைகள் ஒதுக்கி கொடுக்கப்படும். காரைக்கால் உள் விளையாட்டு அரங்கு திறப்பு விழாவுக்கு மத்திய உள்துறை அமைச்சரை அழைக்க உள்ளோம் என்றார்.

**மேக்கேதாட்டுவில் அணைக்கட்ட விரைவில் மத்திய அரசு அனுமதி வழங்கும்: கர்நாடக நீர்பாசனத்துறை அமைச்சர் எம்.பி.பாட்டீல்**

மேக்கேதாட்டுவில் அணைக்கட்ட விரைவில் மத்திய அரசு அனுமதி வழங்கும் என்று கர்நாடக நீர்பாசனத்துறை அமைச்சர் எம்.பி.பாட்டீல் தெரிவித்தார்.

பெங்களூருவில் செவ்வாய்க்கிழமை 2-வது தேசிய அளவிலான அணைக்கட்டுகள் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. இதில் கலந்து

கொண்டு அவர் பேசியது: மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு தேவையான செயல்திட்டங்கள் இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளது. விரைவில் மேக்கேதாட்டுவில் அணைக்கட்ட மத்திய அரசு அனுமதி வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது. எனவே மேக்கேதேட்டுவில் அணைக் கட்டுவதற்கான அனைத்து ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது. அணைக்கட்டுகளை பாதுகாக்க தேவையான நிதிகளை மத்திய அரசு ஒதுக்க வேண்டும். அணைக்கட்டுகளில் நவீன உபகரணங்களை பொருத்தவும் அனுமதி வழங்க வேண்டும். மாநிலத்தில் 8 நீர் நிலைகளில் 12 அணைக்கட்டுகள் உள்ளன. அவைகளை பாதுகாப்பது அவசியம். மாநில அரசு குடிநீர், நீர்பாசன திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தும் என்றார்.

மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கோலார், சிக்பள்ளாபூரு மாவட்டங்களில் குடிநீர் பிரச்னையை போக்குவதற்கான எத்தினஹொளே குடிநீர் திட்டத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது. எனவே எத்தினஹொளே குடிநீர் திட்டப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இடையே உள்ள வனப்பகுதிகளில் திட்டப்பணிகளை தொடங்க சில விதிகளை பின்பற்ற வலியுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி அங்கு திட்டப்பணிகள் தொடங்கப்படும்.

மகாதாயி நதி இணைப்பு தொடர்பாக கோவா மாநில முதல்வருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. அவரின் பதிலுக்காக காத்துள்ளோம். கோவா முதல்வருக்கு இதனை நினைவூட்ட மேலும் ஒரு கடிதம் எழுத முதல்வர் சித்தராமையாவிடம் வலியுறுத்தப்படும். இந்த பிரச்னையில் எதிர்க்கட்சியான பாஜக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 265 பயனாளிகளுக்கு வெள்ளாடுகள்

உத்திரமேரூர் : உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட, ஏழு ஊராட்சிகளில், 265 பயனாளிகளுக்கு, தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட்டன.

உத்திரமேரூர் ஒன்றிய குழு தலைவர், கமலகண்ணன் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் கணேசன், பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கினார். அதில், திருமுக்கூடல் ஊராட்சியில் - 34; சிறுமையிலூார் ஊராட்சியில் - 38; வாடாதவூர் ஊராட்சியில் - 22; திருப்புலிவனம் ஊராட்சியில் - 41; தளவராம்பூண்டி ஊராட்சியில் 30; திணையாம்பூண்டி ஊராட்சியில் - 51 மற்றும் விசூர் ஊராட்சியில் - 49 என, மொத்தம், 265 பயனாளிகளுக்கு வெள்ளாடுகள் வழங்கப்பட்டன.

### சிறுதானிய விற்பனைக்கு உழவர் உற்பத்தி நிறுவனத்தை நாடலாம்

வாலாஜாபாத் : பெருங்கரணை கிராமத்தில், வேளாண் உழவர் உற்பத்தி நிறுவனம் துவக்கப்பட்டுள்ளது. சிறுதானிய உற்பத்தி பொருட்களை விற்பனை மற்றும் கொள்முதல் செய்வோர், இந்த நிறுவனத்தை நாடலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், சித்தாமூர் ஒன்றியம், பெருங்கரணை கிராமத்தில், வேளாண் உழவர் உற்பத்தி நிறுவனம், கடந்த மாதம் துவங்கப்பட்டது. அதில், சிறுதானிய விளை பொருட்களை, மதிப்பு கூட்டி விற்பனை செய்யும் பணியும், அவற்றை கொள்முதல் செய்யும் பணியும்

துவங்கியுள்ளன. இந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் சேர்ந்து பயன்பெற விரும்பும் விவசாயிகள், பதிவு செய்து, சிறுதானிய பொருட்களை விற்பனை மற்றும் கொள்முதல் செய்து கொள்ளலாம் என, உழவர் உற்பத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

**தென்னந்தோப்புகளில் தேங்கியுள்ள தண்ணீரை வடியுங்கள்**



திருவையாறு தென்னை ஆராய்ச்சியாளர் டாக்டர் வா.செ.செல்வம், தென்னை சாகுபடியாளர்கள் தென்னை வளர்ப்பில் முன்னேற்பாடாக இருக்க ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது: வடகிழக்கு பருவமழை அடைமழையாக மாறி, தென்னந்தோப்புகள் வெள்ளக் காடாகியுள்ளது. ஒரு வாரம் 10 நாட்களுக்கு மேல் தென்னந்தோப்புகளில் தண்ணீர் தேங்குமானால், தென்னை மர வேர்கள் அழுகி தென்னை சாக வாய்ப்புள்ளது. தென்னை அதிக தண்ணீரையும் தாங்காது. அதிக வறட்சியையும் தாங்காத சாதுவான பயிர் அரை அடி அகலம், அரை அடி ஆழமும் உள்ள ஒரு வாய்க்கால் இரு தென்னை வரிசைக்கு நடுவில்

எடுத்து பள்ளமான பகுதி நோக்கி வெட்டி விட்டு உடனே தண்ணீர் வடிக்கவும்.

நட்ட தென்னம்பிள்ளைகளின் குழிகளில் தண்ணீர் தேங்கி நிற்குமானால் குழிக்கு குழி ஒரு ஓரத்தில் அரை அடி ஆழம், அரை அடி அகலத்தில் ஒரு சிறிய வாய்க்கால் அமைத்து உபரி தண்ணீரை வடிக்கவும். மேல் மண் ஈரம் குறைந்து காய்ந்து தென்னம்பிள்ளை புது வேர் விட்டுத் தழைக்கும். வடிகால் வசதி இல்லாவிட்டால் தண்ணீர் மட்டத்திலிருந்து அரை அடி உயரத்தில் மண்மேடு அமைத்து நட்டபிள்ளையை எடுத்து நடவும். அது பிழைத்து விடும். தண்ணீருக்குள் தொடர்ந்து இருக்குமானால் அழுகி செத்து விடும். எடுத்து நட்ட பிள்ளை வேர் விட்டு தழைத்து வளரும். தண்ணீரில் மூழ்கிய தென்னம்பிள்ளைகளின் குருத்துப் பகுதியில் வண்டல் படிந்திருக்கும். இந்த வண்டலில் கலந்துள்ள பூஞ்சாணம் மற்றும் பாக்டீரியாக்களினால் பூஞ்சாண வியாதிகள் தாக்கி குருத்து அழுகி தென்னம் பிள்ளைகள் சாக வாய்ப்புள்ளது. P.S.MIX பவுடர் 10- கிராம் எடுத்து 200 மி.லி. தண்ணீரில் கரைத்து நடுக்குருத்தில் ஊற்றவும். குருத்து பசுமை கொடுத்து வளரும். திருவையாறு தென்னை ஆராய்ச்சி மையம் தொலைபேசி எண். 04362 - 260 363-ல் தொடர்பு கொண்டு இலவச ஆலோசனை பெறலாம். இவ்வாறு தென்னை ஆராய்ச்சியாளர் டாக்டர் வா.செ.செல்வம் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

***சின்ன சின்ன செய்திகள்***



**மாடித்தோட்டம்:** மாடித்தோட்ட அமைப்பில் பின் பகுதியில் சுவர்களில் துணிகளை காயவைப்பதற்காகவும் அல்லது விசேஷ காலங்களில் பந்தல் அமைப்பதற்கான இரும்பு வளையங்கள் அமைத்திருப்பார்கள். அவைகளில் உயரமான நான்கு மரத்திலான கம்புகள் அல்லது இரும்பாலான கம்பி குழாய்களை அமைத்து அதில் கம்பிகளைக் கொண்டு பின்னல்களை அமைத்து அதன்மீது படரும். காய்கறிகளான பாகல், கோவைக்காய், பீர்க்கன் போன்றவற்றை மரப்பெட்டிகளையோ அல்லது மண் தொட்டிகளையோ வைத்து அதில் செம்மண், மணல், மக்கிய உரம் ஆகியவற்றை சரிசமமாகக் கலந்து பெட்டிகளின் மேல் விளிம்பிலிருந்து கீழே மூன்று அங்குலம் இடைவெளி இருக்குமாறு நிரப்பி வளர்க்கலாம். மாடித்தோட்டத்தில் முக்கிய பிரச்னை மண் இறுகி போவது நாம் என்ன தான் மணலையும், செம்மண்ணையும் கலந்து, தேவையான அளவு உரம், இலை மக்கு போன்றவற்றை போட்டு கலந்து எடுத்தாலும் நீர் ஊற்ற ஊற்ற மெதுவாக மண் இறுகி போகும் தன்மையை பெற்று விடும். இதில் ரோஜா போன்ற ஒட்டுச்செடிகள் தாக்குப்பிடித்து வளர்ந்து விடும். ஆனால் கீரை, காய்கறி செடிகள் வளர மிகவும் சிரமப்படுகின்றன. அதே நேரத்தில் காற்றின் வேகமும் மேலே அதிகமாக இருப்பதால் இலைகள் வேகமாக வறட்சிக்கு உட்படுகின்றன. எனவே இதனைத் தவிர்க்க மாடித்தோட்டத்தில் மிக முக்கியமாய் மணலை விட்டு விட்டு, அதற்கு பதிலாக தேங்காய் நார் தூளை அல்லது கோகோ பித் அல்லது தேங்காய் நாரிலிருந்து உதிரும் பவுடர் போன்ற பொருட்களைப் பயன்படுத்தலாம். இந்த பவுடர் வெறும் ஊடகமாக மட்டுமே பயன்படும். அதில் செடிக்கு தேவையான எந்த கனிமங்களோ சத்துக்களோ கிடைக்காது. இருப்பினும் நீரை நன்றாக வெகு நாட்களுக்கு பிடித்து வைத்துக் கொள்ளும் இந்த பவுடருடன் ஏதாவது மக்கிய தாவர கழிவு உரம் மற்றும் கொஞ்சம் செம்மண் கலந்து தென்னை நார்க்கழிவு, செம்மண், மண்புழு உரம் 2:2:1 என்ற விகிதத்தில் கலவையைத் தயார் செய்து பயன்படுத்தலாம்.

மொட்டை மாடியில் பரப்பிற்கேற்றவாறு பல பகுதிகளைப் பிரித்து

தொட்டிகளையும் பெட்டிகளையும் சீராக வரிசையாக வைத்து பயிர் வளர்க்கலாம். தேவையான இடைவெளி கொடுத்து, எல்லா செடிகளுக்கும் சூரிய வெளிச்சம் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**இயற்கை விவசாயமும், நவீன தொழில்நுட்பங்களும்:** வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் தெரிவிப்பது யாதெனில், நமது விஞ்ஞானிகள் அறிவியல் ரீதியிலான நிர்வாகம், ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு விஞ்ஞான முறையில் நீர்பயன்பாடு ஆகியவற்றை சிபாரிசு செய்கின்றன. குறுகிக் கொண்டே வரும் நிலப்பரப்பிலிருந்து நாம் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். நிலம் மட்டுமல்ல நீரும் குறைந்து கொண்டே வருகிறது. இயற்கை உரங்களையும், கனிம ரசாயன உரங்களையும் ஒன்றுக்கொன்று எதிரானவை என்று பார்க்கக் கூடாது. இயற்கை இடுபொருட்கள் மண்ணின் உயிரித்தன்மையை அதிகப்படுத்துகின்றன. கனிம உரங்கள் பவுதீக வேதித்தன்மையை அதிகப்படுத்துகின்றன. ஆனால் கனிம உரங்களை நுண்ணூட்டச் சத்துக்களைக் கொடுக்க முடிவதில்லை. இதனால் மண்ணின் நுண்ணூட்டச்சத்துக்களை அதிகப்படுத்த குறைந்தளவு கனிம உரங்களோடு பயோ உரங்களையும் (இயற்கை உரங்கள்), தொழு உரத்தையும் கலந்து கொடுப்பது சிறந்த முறை. இதில் பசுந்தாள் பயிர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இதோடு நைட்ரஜன் சத்துக்களை கொடுக்கக்கூடிய பயறு வகைகளையும் சேர்க்கலாம். இப்படிக் கலந்து செய்யும் முறையே சரியான விவசாயம்.

**ஏலத்தோட்டம் பராமரிப்பு:** நாற்றங்காலில் செடிகளைக் கலைத்து விட வேண்டும். நோய் தாக்கிய செடிகளை நீக்கி விட வேண்டும். நாற்றழுகல் நோய் தாக்குதல் இருந்தால் 0.2 சதம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு கரைசல் மண்ணில் செடியைச் சுற்றி ஊற்ற வேண்டும் அல்லது 0.2 சதம்

மான்கோசெப் அல்லது டிரைகோடெர்மா அல்லது சூடோமோனாஸ் அல்லது பேசில்லஸ் இட வேண்டும். தோட்டத்தில் ஆங்காங்கே இடைவெளியில் புதுசெடிகளை நட வேண்டும். நிழல் தரும் மரக்கன்றுகள் நடுவதையும் திறந்தவெளி உள்ள பகுதியில் நடவேண்டும். செடிகளைச் சுற்றி தேங்கியுள்ள தண்ணீரை வடித்து விடுவது அவசியம். பாசன சாகுபடி தோட்டங்களில் இரண்டாவது முறையாக எக்டருக்கு 41.5: 41.5:83 ஒஞ் என்.பி.கே.1 ஏக்கர் என்ற அளவிலும், மானாவாரி தோட்டங்களில் எக்டருக்கு 37.5:37.5:75 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துக்கள் 1 எக்டர் என்ற அளவில் இட வேண்டும். துத்தநாக குறைபாடு உள்ள தோட்டங்களில் சிங்க்சல்பேட் 250 கிராம் 100 லிட்டர் தண்ணீர் கரைத்து செடிகளின் மீது இலைகளின் மேல் தூவி கீழ்பரப்பில் படும்படி தெளிக்க வேண்டும்.

**- டாக்டர்.கு.சௌந்தரபாண்டியன்.**

**மண்புழுக்குளியல் நீர்**



மண்வளம் பெருகிட மண்புழுக்கள் பெரிதும் உதவுகின்றன. இவை கிடைத்த பயிர் கழிவுகளை உண்டு நன்மை செய்யும் உரமாக்குவது நாம் அறிந்ததே. பயிர் வளர ஊக்கியாக செயல்பட மண்புழுக்களின் உடலின் வெளிப்புறம் ஈரமாக வைத்திருக்க அவை வியர்வை போன்ற திரவத்தை மெதுவாக வெளியிடுகின்றன. இந்த திரவத்தை சேகரித்து பயன்படுத்தும் உத்தி தான் மண்புழுக்குளியல் நீர் தயாரித்தல் ஆகும். அதற்கு ஆங்கிலத்தில் வெர்மிவாஷ் என்ற பெயர் உள்ளது. மண்புழுவை ஒரு தொட்டியில் அல்லது பானையில் வளர்த்து அதன் அடியில் சிறு துளைகள் மூன்று அல்லது நான்கு இட வேண்டும். இதன் மூலம் நீர் வடியும் வண்ணம் செய்ய முடியும். மண்புழு உள்ள பானைக்கு மேல்புற நீர் நிரம்பிய கலயம் அமைத்து அதில் ஒரு லிட்டர் நீரை ஊற்ற வேண்டும். அதற்கு முக்காலி போல மூன்று கம்புகளை கட்டி தொங்க வைத்து சிறு துளை ஏற்படுத்தி சொட்டு சொட்டாக வரவிட வேண்டும். ஒரு இரவு முழுவதும் இவ்வாறு சொட்டுச் சொட்டாக விழும் நீரானது மண்புழுவின் உடலையும் மண்புழு ஏற்படுத்திய சுரங்கங்களையும் கழுவியப் பானையின் அடிப்புறமாக துளைகள் வழியே வெளியேறும். இப்படி வெளியேறும் நீரே மண்புழுக்குளியல் நீர் எனப்படும் டீத்தண்ணீர் மாதிரி உள்ள நீராகும் பானைக்கு அடியில் வேறு பாத்திரத்தை வைத்து சேகரித்து பயன்படுத்தலாம். அதாவது ஒரு லிட்டர் குளியல் நீரை 9 லிட்டர் நீரில் கலந்து செடிகளுக்கு அடியில் ஊற்றியும் இலை வழியாக தெளித்தோ அல்லது சொட்டுநீர் பாசன முறையில் நீரில் கரைத்து அனுப்பியும் நல்ல லாபம் பெறலாம். தயாரிக்க முடியாதவர்கள் தனியார் வசம் வாங்கியும் பயன்படுத்துவது நல்லது. காய்கறிகள், பழங்கள், தென்னை, மலர்கள், மலைத்தோட்டப்பயிர்கள் எல்லாம் நல்ல மகசூல் தர இது பிரதி மாதம் தெளிப்பது நல்லது. மேலும் விபரம் பெற 98420 07125 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும். **- டாக்டர் பா.இளங்கோவன், தோட்டக்கலை உதவி இயக்குநர், உடுமலை, திருப்பூர்.**

**கால்நடைகள் வழங்க கெடு**

திருத்தணி : ஊராட்சிகளில், தமிழக அரசின் விலையில்லா ஆடு, கறவை மாடுகளை, இம்மாத இறுதிக்குள் வழங்கி, திட்டத்தை முடிக்க வேண்டும் என, கால அவகாசம் கொடுக்கப்பட்டு உள்ளது.

திருத்தணி கோட்டத்தில் உள்ள திருத்தணி, திருவாலங்காடு, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை ஆகிய நான்கு ஒன்றியங்களில், தேர்வு செய்யப்பட்ட அனைத்து பயனாளிகளுக்கும், கடந்த மாத இறுதிக்குள் விலையில்லா ஆடு, கறவை மாடுகளை வழங்க வேண்டும் என, அரசு, கால்நடை துறையினருக்கு, வாய்மொழி உத்தரவு பிறப்பித்தது. இந்நிலையில், ஆர்.கே.பேட்டை, திருவாலங்காடு ஒன்றியங்களில், தலா இரு ஊராட்சிகளில், விலையில்லா ஆடு, கறவை மாடுகளை நேற்று வரை வழங்கவில்லை.

இதுகுறித்து, கால்நடை துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:தற்போது ஆடுகள் விலை கணிசமாக உயர்ந்துள்ளதால், ஆந்திரா சந்தையிலும் ஆடுகள் தட்டுப்பாடு நிலவுகிறது. தமிழகம் அல்லது அண்டை மாநிலத்தில் இம்மாதத்திற்குள் ஆடுகள் கொள்முதல் செய்யப்பட்டு, நான்கு ஊராட்சிகளிலும் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்க உள்ளோம். இதற்கு மாவட்ட நிர்வாகம் எங்களுக்கு கால அவகாசம் கொடுத்துள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**கோழிக்கடையில் ராஜாளி தஞ்சம்; வன துறை கட்டுப்பாட்டில் சிகிச்சை**

ஆர்.கே.பேட்டை : ராஜாளி வகையை சேர்ந்த ராட்சத கழுகு, கோழிக்கடை யில் அடைக்கலம் புகுந்தது. உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ள பறவைக்கு, வன துறை அலுவலகத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஆர்.கே.பேட்டை அடுத்த, மாக்மாம்பாபுரம் ஊராட்சியைச் சேர்ந்தது கிருஷ்ணாகுப்பம். நேற்று முன்தினம் மாலை, இந்த கிராமத்தை ஒட்டிய கோழிக்கடைக்கு, நடந்து வந்த ராட்சத பறவையை, கடை உரிமையாளர் ருத்ரமூர்த்தி கண்டார்.அந்த பறவையை மீட்டு, தன் கோழிக்கூண்டில் அடைத்தார். பின், பள்ளிப்பட்டு வன துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. நேற்று காலை, கால்நடை துறை உதவி இயக்குனர் செல்லதுரை தலைமையிலான மருத்துவர்கள் ரவிச்சந்திரன், லோகநாதன் உள்ளிட்டோர், பறவையை பரிசோதனை செய்தனர்.

இதுகுறித்து, மருத்துவர்கள் ரவிச்சந்திரன் கூறுகையில், 'வெளிநாட்டைச் சேர்ந்த இந்த ராட்சத கழுகு, நீண்ட துாரம் பறந்து வந்ததால், இந்த பறவை தற்போது உணவு உண்ணும் நிலையில் இல்லை. நீர்சத்து குறைந்து, களைப்படைந்துள்ளது. அதற்கான மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன' என்றார்.

பின், பள்ளிப்பட்டு வன துறையினரிடம் ராட்சச கழுகு ஒப்படைக்கப்பட்டது. வன துறை அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் கழுகுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிகிச்சை முடிந்த பிறகே, பறவையை சரணாலயத்தில் ஒப்படைப்பதா அல்லது காட்டில் பறக்க விடுவதா என, முடிவு செய்யப்படும் என, வன துறையினர் தெரிவித்தனர்.

**ஆறு உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் துவங்க நிதியுதவி**

ஈரோடு: நபார்டு வங்கி மூலம் கடந்த நிதியாண்டில், ஈரோடு மாவட்டத்தில், ஆறு இடங்களில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் துவங்க நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இதுபற்றி, நபார்டு உதவி பொது மேலாளர் சந்தானம் கூறியதாவது: சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து, தொண்டு நிறுவனங்கள் மூலம் உழவர் உற்பத்தியாளர் கம்பெனி செயல்படுத்த, மத்திய அரசு தேசிய அளவில், 2,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. மொத்தம், 2,000 கம்பெனிகளை ஏற்படுத்தி, ஒவ்வொரு கம்பெனிக்கும் மூன்று ஆண்டுகளில், தலா, 10 லட்சம் ரூபாய் மானியம் வழங்க வேண்டும். இத்திட்டத்தில் தமிழகத்துக்கு, 150 கம்பெனி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஈரோட்டுக்கு, ஆறு துவங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி கோபியில் உழவர் அங்காடி அமைப்பு, பெருந்துறையில் நிலக்கடலை உற்பத்தி, விற்பனை, எண்ணெய் உற்பத்தி செய்ய ஒரு நிறுவனமும், டி.என்.பாளையத்தில் விதை நெல் உற்பத்தி, சான்று பெற்ற விதை உற்பத்தி நிறுவனம், கோபியில் தேங்காய் கொள்முதல், கொப்பரை விற்பனை, தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிறுவனம், தாளவாடியில் சிறுதானியங்கள் கொள்முதல் செய்ய இரண்டு என, ஆறு நிறுவனங்கள் துவங்க, நிதியுதவி வழங்கப்படுகிறது. இவர்கள் மூன்றாண்டுகளில், தங்களது உற்பத்தி மற்றும் தொழிலை முன்னேற்றம் அடைய செய்து, தொடர் கடனுதவி, மானியங்களை பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம், நூற்றுக்கணக்கான உழவர்கள் பயன் பெறுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## 2,609 விவசாயிகளுக்கு 'டிவிடெண்ட்' வழங்கல்

சென்னிமலை: தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 2,609 உறுப்பினர்களுக்கு ஈவு தொகை வழங்கப்பட்டது. சென்னிமலை அடுத்துள்ள கே.ஜி.வலசு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், 3,500க்கும் மேற்பட்ட விவசாயிகள் உறுப்பினராக உள்ளனர். இந்த சங்கம், 110 ஆண்டுகளுக்குப் பிறகு அதிக லாபம் ஈட்டியது.

இதனால் ஈவு தொகையில், 14 சதவீதத்தை உறுப்பினர்களுக்கு பிரித்து கொடுக்க சங்கம் முடிவு செய்தது. அதன்படி உறுப்பினராக உள்ள விவசாயிகளுக்கு ஈவு தொகை (டிவிடெண்ட்) வழங்கும் விழா சங்க அலுவலகத்தில் நடந்தது. சங்க தலைவர் விஸ்வநாதன் தலைமை வகித்தார். ஈரோடு எம்.பி, செல்வக்குமார சின்னையன், மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் மணிமேகலை, மாநில கோ-ஆப்டெக்ஸ் இயக்குனர் கோபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். காங்கேயம் எம்.எல்.ஏ., நடராஜ், 2,609 விவசாயிகளுக்கு, 24 லட்சத்து, 30 ஆயிரத்து, 819 ரூபாயை ஈவு தொகையாக வழங்கினார்.

**தூத்துக்குடியில் மஞ்சள் கிழங்கு அறுவடை தீவிரம்: விவசாயிகள் மகிழ்ச்சி**

தூத்துக்குடி;தூத்துக்குடியில் சாயர்புரம் பகுதியில் மஞ்சள் கிழங்கு அறுவடை தீவிரமடைந்துள்ளது. விளைச்சல் இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பொங்கல் பண்டிகை நெருங்கி வரும் நிலையில், பொங்கல் வைப்பதற்காக வீடுகளில் மஞ்சள் கிழங்கினை பயிருடன் வாங்கி வீடுகளில் வைத்து சுவாமியை வணங்குவார்கள். தூத்துக்குடி சாயர்புரம் பகுதியில் சக்கம்மாள்புரம், சேர்வைக்காரன் மடம், கோவில்பட்டியில் மந்திதோப்பு, ஊத்துப்பட்டி ஆகிய பகுதிகளில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் மஞ்சள் கிழங்கு பயிரிட்டிருந்தனர்.

ஆறு மாத பயிரிரான மஞ்சள் கிழங்கு விளைந்து தற்போது அறுவடைக்கு வந்துள்ளது. வடகிழக்கு பருவமழை அதிகளவில் பெய்துள்ளதால், மஞ்சள் கிழங்கு விளைச்சல் அதிகரித்துள்ளது. தற்போது அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இவை அனைத்தும் பொங்கல் திருநாளில் விற்று முடிந்து விடும்.

சாயர்புரத்தை சேர்ந்த பொன்னி தெரிவித்தாவது: மஞ்சள் கிழங்கு ஆறு மாத பயிராகும். பொங்கல் தினத்தை முன்னிட்டு அறுவடைக்கு வரும் வகையில் பயிரிட்டிருந்தோம். மழை அதிகளவு பெய்து இருந்ததால், மஞ்சள் கிழங்கு விளைச்சல் அதிகரித்துள்ளது. மகிழ்ச்சியை அளிக்கிறது. இங்கு விளையும் மஞ்சள் கிழங்கு புது டெல்லி, மும்பை, சென்னை போன்ற நகரங்களுக்கு கொண்டு செல்லப்படும். ஒரு மஞ்சள் கிழங்கின் விலை 5 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது, என, அவர் தெரிவித்தார்.

## தென்னையில் குருத்தழுகல் நோய் கட்டுப்பாடு

ராமநாதபுரம்: தென்னையில் குருத்தழுகல் நோயை கட்டுப்படுத்த வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் சீகன்பால், ராம்குமார் யோசனை தெரிவித்தனர்.

அவர்கள் கூறியதாவது: "பைட்டோப்தோரா பால்மிவோரா' என்ற பூசணத்தால் தென்னையில் குருத்தழுகல் நோய் ஏற்படுகிறது. இந்த நோயால் இளங்கன்றுகள் முதல் 10 வயது மரங்கள் வரை பாதிக்கப்படும். அதிக ஈரப்பதம், குளிர்ச்சியான சூழ்நிலையில் பூசணம் வேகமாக வளர்ச்சி அடையும். நோய் பாதித்த தென்னையின் குருத்து வெண்மை கலந்த சாம்பல் நிறமாக மாறிவிடும். குருத்தின் அடிப்பாகம் பலம் இழந்து விரைவில் அழுகி துர்நாற்றம் வீசும். பாதிக்கப்பட்ட இளம் குருத்தை இழுத்தால் கையோடு எளிதில் வந்துவிடும். அறிகுறி கண்டவுடன் பாதிக்கப்பட்ட குருத்து பகுதிகளை வெட்டி எடுத்து எரித்துவிட வேண்டும். பின் பாதிக்கப்பட்ட பகுதியில் போர்டோ பசையை தடவினால் பூசணம் அழியத்துவங்கும். மேலும் இலைகளில் ஒரு சதம் போர்டோ கலவையை நன்றாக படும்படி தெளிக்க வேண்டும். காப்பர் ஆக்சிகுளோரைடு மருந்தை 3 கிராம் வீதம் ஒரு லிட்டர் நீரில் கலந்து

குருத்துப்பகுதியில் ஊற்றுவதன் மூலம் நோயை கட்டுப்படுத்தலாம். தொழு உரம் 50 கிலோவுடன் வேப்பம் புண்ணாக்கு, சூடோமோனாஸ் புளூரசன்ஸ் 200 கிராம் கலந்து மரத்திற்கு ஆண்டுக்கு ஒருமுறை இட்டால் நோய் கட்டுப்படும், என்றனர்.

**பனிபொழிவால் வெற்றிலை வரத்து சரிவு: கவுளிக்கு ரூ. 1,500 வரை விலை உயர்வு**

ப.வேலூர்: ப.வேலூர் வெற்றிலை ஏலச் சந்தைக்கு, பனிப்பொழிவால் வெற்றிலை வரத்து குறைந்த நிலையில், அதன் விலை உயர்ந்ததால் வெற்றிலை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டம், ப.வேலூர் காவிரி கரையோரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், ப.வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிப்பாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் வெற்றிலை, ப.வேலூர் நான்கு சாலைப் பகுதியில் உள்ள ஏலச்சந்தைகளுக்கு கொண்டு வரப்படுகிறது. வெள்ளை வெற்றிலை, கற்பூரி வெற்றிலை என, இரு ரகங்களாக தரம் பிரித்து வெற்றிலை ஏலம் விடப்படுகிறது. வெற்றிலை ஏலம் எடுப்பதற்கு, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் வந்து செல்கின்றனர். கர்நாடகம், கேரளம், குஜராத், மகாராஷ்டிரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம், கோவை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. கடந்த வாரம் நடந்த ஏலத்தில் கற்பூரி வெற்றிலை முதல் ரகம், 104 கவுளி (ஒரு கவுளி - 100 வெற்றிலை) கொண்ட ஒரு சுமை, 2,000 ரூபாய்க்கும், இரண்டாவது ரகம், 900 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதே போல் வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம், 4,000ரூபாய்க்கும், இரண்டாவது ரகம், 1,500 ரூபாய்க்கும் ஏலம் போனது. ஆனால் இந்த வாரம் நடந்த ஏலத்தில் கற்பூரி வெற்றிலை முதல் ரகம், 3,500

ரூபாய்க்கும், இரண்டாவது ரகம், 1,600 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதேபோல், வெள்ளைக்கொடி முதல் ரகம், 5,000 ரூபாய்க்கும், இரண்டாவது ரகம், 2,200 ரூபாய்க்கும் ஏலம் போனது. கடந்த ஒரு வாரத்தில், 1,500 ரூபாய் வரை, ஒரு கவுளி சுமைக்கு விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: தற்போது, அதிக அளவில் பனிப்பொழிவு உள்ளதால் வெற்றிலை உற்பத்தி குறைந்துள்ளது. மேலும், வெளிமாநிலங்களின் வெற்றிலையின் வரத்து குறைந்துள்ளதாலும், விலை உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**சுவை மிகுந்த 'போன்லெஸ்' சிக்கன் சிப்பி காளான்: மக்களிடம் வரவேற்பு: உற்பத்தி அதிகரிக்க திட்டம்**

நாமக்கல்: எலும்பு இல்லாத கோழிக்கறியான சிப்பி காளானுக்கு, மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளதால், அதிகளவில் விற்பனை செய்யப்படுகிறது.

காளான்களில், பட்டன், சிப்பி, பான் என பல்வேறு வகைகள் உள்ளன. எலும்பு இல்லாத கோழிக்கறி என்றும் சிப்பி காளான் அழைக்கப்படுகிறது. இவை ஆண்டு முழுவதும் உற்பத்தி செய்யப்படுகிறது. நாமக்கல் மாவட்டத்தில், வள்ளிபுரம், மோகனூர், பரமத்தி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இந்த வகை காளான்கள் பயிரிடப்பட்டுள்ளது. 25 நாளில் முதல் அறுவடை துவங்குகிறது. ஒரு வாரம், 10 நாட்களில் அடுத்தடுத்து இரண்டாவது, மூன்றாவது அறுவடை செய்யலாம். 45 நாட்களில் அதன் அறுவடை முடிந்து விடுகிறது.

இது குறித்து, விவசாயி அருணாசலம் கூறியதாவது: நாமக்கல் மாவட்டத்தில், சிப்பி காளான் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. அதில், புரதசத்து நிறைந்துள்ளது. கொழுப்பு இல்லாததால், சர்க்கரை நோயாளிகள் பயன்படுத்துகின்றனர். நாமக்கல் பகுதியில் விற்பனை

செய்யப்படுகிறது. தற்போது, கரூர், துறையூர் போன்ற பகுதிகளில் இருந்து ஆர்டர் வரத் துவங்கி உள்ளது. விரைவில் உற்பத்தியை விரிவுப்படுத்த திட்டமிட்டுள்ளோம். நேரடியாக இங்கு வந்து வாங்கும் வியாபாரிகளுக்கு, 200 கிராம் பாக்கெட் சிப்பி காளான், 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடை வியாபாரிகள், 45 முதல், 50 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**சிவகங்கையில் மக்காச்சோளம் விளைச்சல் : மூடை ரூ.1,800க்கு விற்பனை**

சிவகங்கை: சிவகங்கை அருகே காந்திநகரில் அதிகளவில் மக்காச்சோளம் நடவு செய்யப்பட்டுள்ளது. தற்போது மூடை ரூ.1,800 வரை விற்கப்படுகிறது. சிவகங்கை வறண்ட செம்மண் மிகுந்த பூமி. பெரும்பாலான நிலங்கள் மழையை நம்பியே உள்ளது. இப்பகுதியில் வசிக்கும் மானாவாரி விவசாயிகள் கிடைக்கும் நீரை பயன்படுத்தி, சீசனுக்கு ஏற்ற விவசாயத்தை மேற்கொள்கின்றனர். அந்த வகையில், சிவகங்கை அருகே காந்திநகரில் உள்ள விவசாயிகள் மாக்காச்சோளம், கோழிகொண்டைப்பூ, நிலக்கடலை, வெண்டை போன்ற பயிர்களை நடவு செய்துள்ளனர். மூன்றே மாதத்தில் விளைச்சல் தரும் மக்காச்சோளத்தை பல ஏக்கரில் நடவு செய்துள்ளனர். "போர்வெல்' மூலம் கிடைக்கும் நீரை பயன்படுத்தி, இவற்றை வளர்க்கின்றனர். விவசாயி கருப்பையா கூறுகையில்,""இரண்டு மாதங்களுக்கு முன் நடவு செய்தோம். அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. செலவு அதிகம் இல்லை. மண்வளம் நன்றாக இருப்பதால் நீர் மட்டும் பாய்ச்சினால் போதும். சிறுவர்கள் விரும்பி சாப்பிடும் "பாப்கார்ன்', "சுவீட்கார்ன்' தயாரிக்க பயன்படுகிறது. தற்போது மக்காச்சோளத்திற்கு மவுசு அதிகம்.

ஒரு மூடை(100 கிலோ) ரூ.1,800க்கு வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர்," என்றார்.

**தயார் ! : விளைந்த நெல்லை பெற கொள்முதல் நிலையம் : மாவட்டத்தில் 53 இடங்களில் ஏற்படுத்த திட்டம்**

சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லை, அரசு நிர்ணயித்த விலையில் பெற நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் 53 இடத்தில் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளது

மாவட்டத்தில் 66 ஆயிரம் எக்டேரில் நெல் நடவு செய்யப் பட்டுள்ளது. வடகிழக்கு பருவ மழை இளையான்குடி, காளையார் கோவிலை தவிர்த்து மற்ற தாலுகாக்களில் விவசாயிகளுக்கு கை கொடுத்துள்ளது. குறிப்பாக வைகை பாசன நீர் மூலம் விவசாயிகள் அதிகளவில் நெல் நடவு செய்துள்ளனர். தற்போது, நெல் அறுவடை பணி துவங்கி யுள்ளது.

வியாபாரிகள் தலையீடு நெல்லை அறுவடை செய்யும் விவசாயிகளிடம், வியாபாரிகள் "சிண்டிகேட்' அமைத்து குறைந்த விலைக்கு நெல்லை வாங்கிச் செல்வதால், விவசாயிகள் பாதிப் பிற்கு உள்ளாகின்றனர். எனவே, நுகர்பொருள் வாணிப கழகம் மூலம், கொள்முதல் நிலையங்கள் அமைத்து, விவசாயிகளின் நிலங் களுக்கே நேரடியாக சென்று நெல் மூடைகளை கொள்முதல் செய்யப் படுகிறது. கடந்த ஆண்டு நெல் விளைச்சல் குறைவாக இருந்ததால் மாவட்டத்தில் 37 ஆயிரம் டன் நெல்லை நுகர்பொருள் வாணிப கழகம் கொள்முதல் செய்தது. இந்த ஆண்டு நெல் விளைச்சல் அதிகரித் துள்ளதால், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகளவில் நெல் கொள்முதல் செய்ய, மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதற்காக 53 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க மாவட்ட நிர்வாகம் திட்ட மிட்டுள்ளது. இடங்களை தேர்வு செய்வதற்கான, ஒப்புதலை கலெக்டர் மலர்விழியிடம் பெற நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள் முயற்சித்து வரு கின்றனர். கலெக்டர் ஒப்புதல் கிடைத்தவுடன், 53 இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்து, நுகர்பொருள் வாணிப கழக அலுவலர்கள் மூலம், வியா பாரிகள் தலையீடு இன்றி விவசாயி களிடம் நேரடியாக நெல் மூடை களை கொள்முதல் செய்வதென மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

**புளி வணிகர் சங்க ஆலோசனை கூட்டம்**

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட புளி வணிகர் நல சங்க ஆலோசனை கூட்டம், தர்மபுரி அடுத்த பாப்பாரப்பட்டியில் நடந்தது. பாப்பாரப்பட்டி சங்க தலைவர் சின்னச்சாமி தலைமை வகித்தார். தர்மபுரி மாவட்ட தலைவர் பாஸ்கர், சங்கத்தின் செயல்பாடு மற்றும் வளர்ச்சி குறித்து பேசினார். வரும், பிப்ரவரி, 10ம் தேதிக்கு மேல், புதிய புளி விற்பனை துவக்குதல், புளி உற்பத்தி செய்யும் பெண்களுக்கு உதவிடும் வகையில், பல்வேறு திட்டங்களை செயல்படுத்துதல் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் பாப்பாரப்பட்டி பொருளாளர் முருகேசன், பென்னாகரம் சுப்பிரமணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விதை கிராம பயிற்சி**

தர்மபுரி: வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை, விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ், மாவட்ட அளவிலான விவசாயிகளுக்கு, விதை கிராமப் பயிற்சி கே.நடுஹள்ளியில் நடந்தது. விதைச் சான்றளிப்புத் துறை வேளாண்மை அலுவலர் சசிகுமார் தலைமை வகித்துப் பேசினார். அதை தொடர்ந்து நடந்த பயிற்சியில், விதைப்பண்ணை பதிவு செய்தல், விதைப்பண்ணை பராமரிப்பு, பயிர் விலகல், வயல் ஆய்வு செய்தல், விதைகளை உலரவைத்தல் குறித்து

பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், விதைகளில் இருக்க வேண்டிய ஈரப்பதம், தரமான விதைகளை பிரித்தெடுத்தல், பூச்சிநோய் தாக்காத அதிக மகசூல் தரக்கூடிய விதைகளை தேர்வு செய்து விதைத்தல், விதை நேர்த்தி செய்வதன் முக்கியத்துவம், அறுவடை செய்த விதைகளை, தரமான முறையில் உலர வைத்து சேமித்து வைத்தல் பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் மகேஸ்வரி, உதவித் தொழில்நுட்ப மேலாளர் பரமசிவம் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பொங்கல் திருநாள் எதிரொலி : அச்சு வெல்லம், ஏலக்காய் முந்திரி பருப்பு விலை அதிகரிப்பு**



சென்னை: பொங்கல் திருநாள் எதிரொலியாக பொங்கல் வைக்க பயன்படும் பொருட்கள் விலை உயர தொடங்கியுள்ளன. சேலம் வெல்லம்

கடந்த வாரம் ரூ.40க்கு விற்றது ரூ.50 ஆக உயர்ந்துள்ளது. வேலூர் வெல்லம் கிலோ ரூ.48லிருந்து ரூ.55, அச்சு வெல்லம் ரூ.60லிருந்து ரூ.70, முந்திரி பருப்பு ரூ.550லிருந்து ரூ.600, முந்திரி பருப்பு (2ம் ரகம்) ரூ.450லிருந்து ரூ.500, ஏலக்காய் ரூ.800லிருந்து ரூ.900, ஏலக்காய் (2ம் ரகம்) ரூ.600லிருந்து ரூ.700, உலர் திராட்சை (முதல் ரகம்) ரூ.120லிருந்து ரூ.200, உலர் திராட்சை (2ம் ரகம்) ரூ.130லிருந்து ரூ.150 ஆக உயர்ந்துள்ளன.

பொங்கல் பச்சரிசி ஒரு கிலோ ரூ.38லிருந்து ரூ.34, இட்லி அரிசி ரூ.36லிருந்து ரூ.32, இட்லி அரிசி(2ம் ரகம்) ரூ.32லிருந்து ரூ.28, ரூபாலி (புதுசு) 25 கிலோ ரூ.850லிருந்து ரூ.750, அதிசய பொன்னி (புதுசு) ரூ.900லிருந்து ரூ.850 ஆக குறைந்துள்ளது. புது அரிசி வரத்து அதிகரிப்பால் பழைய அரிசிக்கு கடும் கிராக்கி ஏற்பட்டு விலை உயர்ந்துள்ளது.

பாபட்லா ரூ.1100லிருந்து ரூ.1200, வெள்ளை பொன்னி அரிசி ரூ.1300லிருந்து ரூ.1400 ஆக விலை உயர்ந்துள்ளது. இதேபோல, துவரம் பருப்பு ரூ.170லிருந்து ரூ.140, தான்சானியா துவரம் பருப்பு ரூ.130லிருந்து ரூ.100, உளுத்தம் பருப்பு ரூ.180லிருந்து ரூ.150, கடலைப்பருப்பு ரூ.80லிருந்து ரூ.70, கடலைப் பருப்பு (2ம் ரகம்) ரூ.70லிருந்து ரூ.65, பர்மா உளுத்தம் பருப்பு ரூ.160லிருந்து ரூ.140, பாசிப்பருப்பு ரூ.130லிருந்து ரூ.110, பாசிப்பருப்பு (2ம் ரகம்) ரூ.110லிருந்து ரூ.95, மலைப்பூண்டு ரூ.250லிருந்து ரூ.200, நாட்டுப்பூண்டு ரூ.220லிருந்து ரூ.190, நாட்டுப்பூண்டு (2ம் ரகம்) ரூ.200லிருந்து ரூ.160 ஆகவும் விலை குறைந்துள்ளது.

புது பூண்டு வரத்து அதிகரிப்பால் பூண்டு விலை கிலோவுக்கு இன்னும் ரூ.30 முதல் 40 வரை விலை குறைய வாய்ப்புள்ளது என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன்

தெரிவித்தார். மேலும் மலேசியா, இந்தோனேசியா பாமாயில் இறக்குமதி அதிகரிப்பால் பாமாயில் ரூ.55லிருந்து ரூ.50, சன்பிளவர் ஆயில் ரூ.86லிருந்து ரூ.82, சன்பிளவர் ரூ.82லிருந்து ரூ.76 ஆகவும் விலை குறைந்துள்ளதாக சொரூபன் தெரிவித்துள்ளார்.

**நிரம்பும் நிலையில் ராமக்காள் ஏரி விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி, : தர்மபுரியில் தற்போது பெய்து வரும் கோடை மழையால் ராமக்காள் ஏரி நிரம்பும் நிலையில் உள்ளது. இந்த ஏரியை நம்பி அப்பகுதியில் விவசாய பணிகள் துரிதமாக நடந்து வருகிறது. தர்மபுரி - கிருஷ்ணகிரி சாலை மதிகோன்பாளையத்தில் ராமாக்காள் ஏரி உள்ளது. சுமார் 265 ஏக்கர் பரப்பளவில் கொண்ட இந்த ஏரியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் இருந்துகொண்டே இருக்கும். கடந்த சில மாதங்களுக்கு முன் ராமக்காள் ஏரி வறண்டது. இதனால் ஆடு, மாடு, மேய்ச்சல் நிலமாக மாறியது. இந்நிலையில், கடந்த மாதம் மற்றும் அவ்வவ்போது பெய்து வரும் மழையால் ராமக்காள் ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது.

இதனால், வறண்டு கிடந்த ராமக்காள் ஏரி, தற்போது நிரம்பும் நிலையில் உள்ளது. இந்த ஏரியை நம்பியுள்ள சுமார் 400 ஏக்கர் விவசாய நிலங்களில் சாகுபடி செய்யும் பணியில் விவசாயிகள் துரிதமாக ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ராமக்கா ஏரிக்கு வரும் கால்வாய் பகுதிகள், ஆக்கிரமிப்பால் நீர் வரத்து குறைந்து காணப்பட்டது.

தற்போது பெய்து வரும் மழையால் ஏரியில் மழைநீர் தேங்கியுள்ளது. இதை நம்பி நெல், கரும்பு சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். ஏரியை சுற்றியுள்ள பகுதிகளில் கிணறு, ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது என்றனர்.

**பருத்திக்கு இந்தாண்டு நல்ல விலை கிடைக்கும் விழிப்புணர்வு முகாமில் அதிகாரி தகவல்**

பெரம்பலூர், : பருத்தி விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம் பெரம்பலூர் அடுத்த வல்லாபுரம் பிரிவு பாதையிலுள்ள வேளாண் அறிவியல் மைய பயிற்சி அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ரோவர் கல்வி மற்றும் சமூக நல நிறுவனங்களின் தாளாளர் வரதராஜன் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கி பேசியதாவது: பருத்தி சாகுபடியில் ரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தெளிப்பைக் குறைத்து தொழு உரம், மண்புழு உரம், இயற்கை பூச்சிக் கொல்லிகளான வேம்பு சார்ந்த பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதனால் மண்ணின் தரம் பாதுகாக்கப்படுவதோடு குறைந்த செலவில் அதிக மகசூலுடன் நிறைந்த வருமானமும் பெறமுடியும் என்றார். இந்திய பருத்திக் கழக கிளை மேலாளர் ஜெயக்குமார் பேசுகையில், பெரம்பலூர் மாவட்டத்தில் விளையும் பருத்தி பஞ்சுகள் நீண்ட இழை தரத்துடன் காணப்படுவதால் அதற்கு நல்ல விலை கிடைக்கும். தமிழ்நாட்டில் ஏற்பட்ட அதிக மழைப்பொழிவு, கர்நாடகாவில் ஏற்பட்ட வறட்சி, பஞ்சாப்பில் வெள்ளை ஈ தாக்குதல், குஜராத்தி–ில் இளஞ்சிவப்பு காய்ப்புழுவின் தாக்குதல் போன்ற காரணங்களால் இந்த ஆண்டு பருத்தி உற்பத்தி மிகவும் குறைவாகவே இருக்கும். அதனால் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பருத்திக்கு இந்த ஆண்டு நல்ல விலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே, பருத்தி விவசாயிகள் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் விற்பனை மையங்களில் விற்பனை செய்து அதிக லாபம் பெறலாம் என்றார்.

விழிப்புணர்வு நிகழ்ச்சியில் வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் கவிமணி, ஒருங்கிணைந்த உர நிர்வாகம் குறித்தும் வேளாண் அறிவியல் மைய பருத்தி திட்ட ஆராய்ச்சியாளர் சரவணன் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் குறித்தும் விளக்கினார். ரோவர் வேளாண் கல்லூரி முதல்வர் செல்வராஜன், தனி அலுவலர்

ஜெபராஜ் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். இந்த நிகழ்ச்சியில் வயலப்பாடி, துங்கபுரம் மற்றும் சிறுகன்பூர் கிராமத்திலுள்ள 100க்கும் மேற்பட்ட பருத்தி விவசாயிகள் மற்றும் வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர்கள், அலுவலர்கள், களப்பணியாளர்கள் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக வேளாண் அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் (பொ) கதிரவன் வரவேற்றார். இந்திய பருத்திக் கழகத்தின் முதுநிலை பருத்திக்கொள்முதல் அலுவலர் வெங்கடாச்சலம் நன்றி கூறினார்.

**2வது களையெடுப்பு வேளையில் இறவை நிலக்கடலை சாகுபடியில் உயர் விளைச்சலுக்கு ஜிப்சம் அவசியம் வேளாண் துறை ஆலோசனை**

அன்னவாசல், : புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள இறவை நிலக்கடலையில் உயர் விளைச்சல் பெற ஜிப்சமிடுவது அவசியம் என்றும். 2வது களையெடுப்பு வேளையான இதுவே ஜிப்சமிட ஏற்ற தருணம் என்றும் வேளாண் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது. இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சந்திரசேகரன், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் சாந்தி, வேளாண் அலுவலர் செல்வி ஆகியோர் கூட்டாக வெளியிட்ட விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது பயிரிடப்பட்டுள்ள இறவை நிலக்கடலையில், விதைத்து 45 நாட்கள் வயதுடைய பயிரில் 2ம் முறை களையெடுத்து ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். அதற்கான உரிய தருணம் இது. இவ்வாறு ஜிப்சம் இட்டு மண் அணைப்பதால் விழுதுகள் நன்கு இறங்கி திரட்சியான காய்கள் கிடைக்கும். மண் அணைத்தல்: நிலக்கடலையில் உயர் விளைச்சல் பெற ஜிப்சம் இட்டு மண் அணைத்தல் எனும் தொழில்நுட்பம்

மிக முதன்மையானதாகும். நிலக்கடலையில் விழுதுகள் மண்ணில் எளிதாக இறங்க செடிகளைச் சுற்றி மண் அணைப்பது இன்றியமையாதது. இல்லையெனில் விழுதுகள் நிலத்தின் மேல் பரவிக் காய்கள் சரியாகப் பிடிக்காத நிலை ஏற்படும். சுண்ணாம்பு சத்து: நிலக்கடலையில் திரட்சியான மிகுதியான காய்கள் பெற ஜிப்சம் இடுவது இன்றியமையாதது. ஜிப்சத்தில் சுண்ணாம்புச் சத்தும், கந்தகச் சத்தும் உள்ளன. நிலக்கடலை திரட்சியாக இருக்கச் சுண்ணாம்புச் சத்து தேவைப்படுகிறது. காய்களில் எண்ணெய்ச் சத்து மேம்பட கந்தகச் சத்து தேவைப்படுகிறது. இந்த 2 சத்துகளும் ஜிப்சத்தில் உள்ளன. வயலில் ஈரம்: இறவை நிலக்கடலையில் 2வது களையெடுக்கும் வேளையில் அதாவது விதைத்து 45 நாட்களில் களையெடுக்கும் சமயம் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு செடிகளைச் சுற்றி நன்கு மண் அணைத்துவிடுதல் வேண்டும். இதனால் நிலக்கடலையில் நன்கு விழுதுகள் இறங்கி காய்கள் திரட்சியாகவும், எண்ணெய்ச் சத்து மிகுந்தனவாகவும் கிடைக்கும். ஜிப்சம் இடும் வேளை வயலில் ஈரம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளல் வேண்டும். எனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் இறவை நிலக்கடலைச் சாகுபடி செய்துள்ள உழவர்கள் அனைவரும் நிலக்கடலையில் இவ்வேளையில் ஜிப்சம் இட்டு நன்கு மண் அணைத்து மிகுந்த எடையுள்ள திரட்சியான பொக்கற்ற காய்களைப் பெற்று உயர் விளைச்சல் பெற வேண்டும். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

**பொங்கல் பண்டிகைக்காக மஞ்சள்செடி பறிக்கும் பணி மும்முரம் நசைநோயால் கிழங்குகள் சுருங்கியது**

கும்பகோணம், : கும்பகோணம் பகுதியில் தைப்பொங்கலை முன்னிட்டு மஞ்சள் பறிக்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. மழை காரணமாக நசை நோய் பாதித்ததால் பாதிக்கு பாதி விலை குறைந்ததால் நஷ்டம்

ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கும்பகோணம் அடுத்த சோழன் மாளிகையில் 100, ஏக்கர் அளவில் மஞ்சள் பயிரிட்டுள்ளனர். தைப்பொங்கலை முன்னிட்டு பொங்கல் பானையின் கழுத்தில் மஞ்சள் கொடியை சுற்றுவார்கள். எனவே பொங்கல் பண்டிகையில் மஞ்சள் செடி அவசியமானதாக கருதப்படுகிறது. இந்த மஞ்சள் செடி கும்பகோணத்தை சுற்றியுள்ள சோழன்மாளிகை. பட்டீஸ்வரம், ஆவூர், கோவிந்தகுடி, வளையப்பேட்டை, சுவாமிமலை உள்ளிட்ட சுற்று பகுதிகளில் 1,000 ஏக்கர் அளவில் பயிரிடப்பட்டுள்ளது. பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 2 தினங்களே உள்ள நிலையில் மஞ்சள் செடி பறிக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. இங்கு பறிக்கப்படும் மஞ்சள்கிழங்கு செடி சென்னை, பாண்டிச்சேரி, கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலங்கள், வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது. கடந்த சில மாதஙகளுக்கு முன் பெய்த பலத்த மழையால் மஞ்சள் செடியில் ஒரு வித நோய் பாதிப்பு ஏற்பட்டு மஞ்சள் கிழங்கு பெருக்காமல் சுருங்கி விட்டது. இதனால் மஞ்சள் கிழங்கிற்கு உரியவிலை போகாமல் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இது குறித்து அப்பகுதியை சேர்ந்த பிரபாகரன் கூறுகையில், இந்த பகுதியில் 1000 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள்செடி பயிரிட்டுள்ளனர். பொங்கல் விழாவில் முக்கியமானதாக மஞ்சள் இருப்பதால் தற்போது மஞ்சள் பறிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. ஆடி மாதம் மஞ்சள் பயிரிட்டு பொங்கலுக்காக பறிக்கப்படுகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன் பெய்த பலத்த மழையால் மஞ்சள் செடியில் நசைநோய் தாக்குதலால் 500 ஏக்கர் அளவில் பாதிப்பு அடைந்துள்ளது. இதனால் பல லட்ச ரூபாய் நஷடம் அடைந்துள்ளோம். நோயினால் மஞ்சள் கிழங்கு பெருக்காமல் இருப்பதால் உரிய விலைக்கு போகாத நிலை உள்ளது. ஒரு ஏக்கருக்கு ரூ.60ஆயிரம் வரை செலவாகும். மஞ்சள் நன்றாக

விளைந்திருந்தால் ஒரு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வரை லாபம் வரும். ஆனால் நசைநோய் பாதிப்புள்ளதால் கிழங்குகள் சுருங்கி விட்டது. விலை போகாதநிலை உள்ளது. 10 மஞ்சள் கிழங்கு செடி கொண்ட கட்டு ஒரூ. ரூ 60 வரை விற்பனை செய்யப்படும். நசை நோய் தாக்குதலால் 1 கட்டு ரூ.30க்கு குறைவாக விற்பனை செய்யப்படுகிறது. அதில் கட்டுக்கு ரூ.7 மார்க்கெட் வியாபாரிகள் கமிஷன் பெற்றுக் கொள்கின்றனர். இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரு நஷ்டம் அடைந்துள்ளோம். ஒரு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வரை நஷடம் ஏற்பட்டுள்ளது. தற்போது கும்பகோணம் சுற்றுப்பகுதியில் மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு இந்த தைப் பொங்கலில் மஞ்சள் விற்பனையில் பல கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

**நாகை மாவட்டத்தில் 196 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு**

கொள்ளிடம், : கொள்ளிடம் அருகே உள்ள பழையாபாளையத்தில் இயங்கி வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை கலெக்டர் பழனிசாமி நேற்று ஆய்வு செய்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது: நாகை மாவட்டத்தில் 1.29 லட்சம் எக்டேரில் சம்பா, தாளடி நெல் பயிரிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் முதல்கட்டமாக 44 கொள்முதல் நிலையம், இரண்டாம் கட்டமாக 152 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. 282 கொள்முதல் நிலையங்கள் தேவைப்படுகிறது. அதில் இதுவரை 196 நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 86 நெல் கொள்முதல் நிலையங்கள் அறுவடை காலங்களில் அறுவடை செய்யும் பரப்பளவை பொறுத்து திறப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றார். சீர்காழி எம்எல்ஏ சக்தி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் ஜெயராமன், ஒன்றியக்குழு தலைவி மீனா, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் மீனா, மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் நாகேந்திரன் உடனிருந்தனர்.

**சம்பா, தாளடி நெற்பயிரில் நெற்பழநோய் தாக்குதல் கட்டுப்படுத்தும் வழிமுறை விவசாயிகளுக்கு யோசனை**

நீடாமங்கலம், : காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா, தாளடி நெற்பயிர்களில் நெற்பழ நோய் தாக்குதல் கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. நீடாமங்கலம் வேளா ண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் நிலைய தலைவர் பாஸ்கரன், பூச்சியியல்துறை உதவி பேராசிரியர் ராஜாரமேஷ் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை: காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா, தாளடி பருவத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிரில் நெற்பழ நோய் தாக்குதல் ஆங்காங்கே தென்படுகிறது. இந்த நோயானது அஸ்டி லாஜி நாய்டியா வைரஸ் என்ற பூஞ்சாணத்தால் உண்டாகிறது. பொதுவாக அதிகமான மழை பெய்யும் நேரங்களில் இந்நோயானது நெற்பயிரை தாக்குவதால் விவசாயிகள் நோய் தாக்கதலுக்கு ஆண்டில் அதிக விளைச்சல் கிடைப்பதாக நம்புகிறார்கள் இதற்கு லட்சுமி நோய் என்ற பெயரும் உண்டு. நெல் ரகங்களான கோ-43, பிபீடி- 5204, பொன்மனி, ஏடிடீ -38, ஏடிடீ -39 போன்ற ரகங்களில் நெற்பழ நோய் தாக்குதல் அறிகுறி காணப்படுகிறது. நெற்பயிரின் பூக்கும் தருணத்திலும் கதிர் வெளிவரும் நேரத்திலும் இதன் தாக்குதல் மிகவும் அதிகமாக காணப்படும். காற்றில் காணப்படும் அதிகமான ஈரப்பதம், 90 சதவீதத்துக்கு மேல் குறைந்த வெப்பநிலை 20 முதல் 25 டிகிரி செல்சியஸ் மற்றும் இரவு பனியும் நோய் பரவுவதற்கு காரணமாக உள்ளது. நோய் பாதிப்புள்ளான விதைகள் காற்று, மண் மற்றும் நீர் மூலமாக பரவுகிறது. நோயின் பூஞ்சாண வித்துகளால் ஒரு வயலிலிருந்து மற்ற வயல்களுக்கும் பரவும். இதன் தாக்குதலுக்கு உள்ளாகும் ஒவ்வொரு நெற்கதிர் மணிகளும் பூசணத்தின் வித்துகளால் நிரம்பி அதன் வெளிப்பகுதி பச்சை நிறமாகவும் உட்பகுதி மஞ்சள் கலந்த ஆரஞ்சு நிறமாகவும் உருண்டை வடிவில் மாறிவிடும். நோய் தாக்கிய பின் இதை கட்டுப்படுத்துவது மிகவும் சிரமம். எனவே நெற்பழ நோய் தாக்குதலிலிருந்து நெற்பயிரை காப்பாற்ற கலப்பு கதிர் வெளிவரும்போது ஒரு முறையும், பால் பிடிக்கும் தருவாயில் ஒரு

முறையும் சூடோமோனாஸ் ஒரு கிலோ, புரோபிகோனசோல் 200 மிலி, காப்பர் ஹைட்ராக்ஸைடு 500 கிராம் ஏதாவது ஒன்றை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் மாலை வேலைகளில் தெளிக்க வேண்டும். நோய் தாக்கதல் அதிகமாக இருப்பின் 15 நாள் கழித்து மீண்டும் தெளித்து பழநோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம் என்றனர்.

**பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி அவசியம் வேளாண்துறை ஆலோசனை**

பழநி, : பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி செய்வதன் அவசியம் குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.பயிர்களில் விதை மூலம் பரவக்கூடிய பூஞ்சான் நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு விதையுடன் பூஞ்சான மருந்து கலந்து விதை நேர்த்தி செய்திட வேண்டும். விதை மூலம் பரவும் இலைப்புள்ளி, இலைக்கருகல், இலை உறை அழுகல் மற்றும் குலை நோய் போன்ற பூஞ்சான நோய்களை தடுக்க 1 கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் - ”கார்பன்டைசிம்” கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் விதைக்க வேண்டும். இல்லா விட்டால் 1 கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் “டிரைக்கோ டெர்மாவிருடி” அல்லது 1 கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் “சூடோமோனாஸ் ப்ளாரசன்ஸ்” என்ற உயிரியல் பூஞ்சான மருந்தை விதைப்பதற்கு முன் கலந்து விதைக்க வேண்டும்.
1 ஏக்கர் விதைக்க தேவையான விதைக்கு விதை நேர்த்தி செய்ய 10 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை செலவாகும். ஆனால், விதை நேர்த்தி செய்வதால், பயிர் வளர்ச்சி காலத்தில் நோய்கள் தாக்கி, அவற்றை கட்டுப்படுத்த மருந்திற்கு செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. நெல், சிறுதானியங்கள், பருத்தி, கரும்பு, எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களுக்கு விதைநேர்த்தி செய்வதற்கு 1 ஏக்கர் விதைக்கு அசோஸ் பைரில்லம் 1 பாக்கெட் ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான

விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும். நிலக்கடலை மற்றும் பயிறு வகைகளுக்கு விதை நேர்த்தி செய்வதற்கு 1 ஏக்கர் விதைக்கு “ரைசோபியம்கல்ச்சர்” 1 பாக்கெட்டை ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதையைக் கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின் விதைக்க வேண்டும். உயிர் உர விதை நேர்த்தி செய்வதால், உயிர் உரங்கள் காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு கொடுக்கும். அதனால் இளம் பயிரின் இலைகள் கரும்பச்சை நிறத்துடன் செழிப்பாக வளரும்.

பயிர்கள் வறட்சியை தாங்கி வளர்ந்து, கூடுதல் மகசூல் கொடுக்கும். இதனால் கால் பங்கு தழைச்சத்து இடுவதை குறைக்கலாம். அதன் மூலம் உரச் செலவை குறைக்கலாம். எனவே. விவசாயிகள் பூசணக் கொல்லி விதை நேர்த்தி செய்து பயிர்களை நோய்களிலிருந்து வருமுன் காக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுகக்கு பழநி வேளாண்மை அலுவலகத்தை விவசாயிகள் அணுகலாமென பழநி வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பூக்களின் விலை 30 சதவீதம் வரை உயர்வு மேலும் விலை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் தகவல்



சென்னை,

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பூக்களின் விலை 30 சதவீதம் வரை உயர்ந்துள்ளது என்றும், மேலும் விலை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

<u>பூக்கள் விலை உயர்வு</u>

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த வாரத்தை காட்டிலும் பூக்களின் விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரத்தை ஒப்பிட்டு பார்க்கும்

போது, அனைத்து பூக்களின் விலையிலும் 30 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

திண்டுக்கல், மதுரையில் இருந்து விற்பனைக்காக கொண்டு வரப்படும் மல்லிகைப்பூ கிலோவுக்கு ரூ.150 வரை அதிகரித்து ஒரு கிலோ ரூ.600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல், மற்ற பூக்களின் விலையும் 30 சதவீதம் வரை அதிகரித்து இருப்பதாகவும், மேலும் விலை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து கோயம்பேடு மார்க்கெட் மலர் மொத்த வியாபாரிகள் சங்க தலைவர் அருள் விசுவாசம் கூறியதாவது:–

<u>மேலும் அதிகரிக்க வாய்ப்பு</u>

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, கடந்த வாரத்தை காட்டிலும் பூக்களின் விலை 30 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. மல்லி, சாதி, சாமந்தி ஆகிய பூக்கள் விலை அதிகளவில் உயர்ந்துள்ளது. இன்று(நேற்று) நிலவரப்படி, திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களில் இருந்து வரும் மல்லிகைப்பூ ஒரு கிலோ ரூ.600–க்கும், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்படும் மல்லிகைப்பூ ஒரு கிலோ ரூ.1,000–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

பொங்கல் பண்டிகைக்கு சாமந்தி, செண்டு ஆகிய பூக்கள் நல்ல விற்பனை ஆகும். தற்போது அதன் வரத்து நன்றாகவே இருக்கிறது. பொங்கல் பண்டிகையின் போது, 50 சதவீதம் வரை விலை அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது.

<u>விலை நிலவரம்</u>

மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட பூக்களின் விலை நிலவரம்(ஒரு கிலோ) வருமாறு:–

மல்லிகைப்பூ (திண்டுக்கல், மதுரை)– ரூ.600, அரளி – ரூ.180, விருச்சி – ரூ.100, சம்பங்கி – ரூ.80, செண்டு – ரூ.30, கனகாமரம் – ரூ.800, சாமந்தி – ரூ.100 முதல் ரூ.120 வரை, ரோஸ் – ரூ.100, கட்டு ரோஸ்(20 பூ) – ரூ.120,

தவனம் – ரூ.50, சாதி – ரூ.500, மல்லிகைப்பூ (செங்கல்பட்டு, திருவள்ளூர்) – ரூ.1,000.இவ்வாறு அவர் கூறினார்.

## பென்னாகரம் வாரச்சந்தையில் 10 ஆயிரம் ஆடுகள் விற்பனை கூடுதல் விலை போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி



பொங்கல் பண்டிகையையொட்டி பென்னாகரம் வாரச்சந்தையில் நேற்று 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் விற்பனையானது. கூடுதல் விலை போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

வாரச்சந்தை

தர்மபுரி மாவட்டம் பென்னாகரத்தில் செவ்வாய்க்கிழமை தோறும் வாரச்சந்தை நடைபெறுவது வழக்கம். இந்த சந்தைக்கு ஏரியூர், நெருப்பூர், பூச்சூர், பெரும்பாலை, ஒகேனக்கல், பாப்பாரப்பட்டி மற்றும் சுற்று வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் தாங்கள் வளர்த்து வரும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளை விற்பனைக்காக கொண்டு

வருவார்கள். இந்த வாரச்சந்தைக்கு தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் வந்து ஆடுகளை வாங்கி வாகனங்களில் ஏற்றி செல்வார்கள்.

இந்தநிலையில் பொங்கல் பண்டிகையையொட்டி நேற்று பென்னாகரத்தில் கூடிய வாரச்சந்தைக்கு அதிகாலை முதலே விவசாயிகள், பொதுமக்கள் ஆடுகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். நேற்று சுமார் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இந்த ஆடுகளை வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கி சென்றனர். செம்மறி ஆடு ரூ.5 ஆயிரம் முதல் ரூ.7 ஆயிரம் வரையும், வெள்ளாடு ரூ.5 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரையும் விலை போனது. பெரிய ஆடுகள் ரூ.15 ஆயிரம் வரை விற்பனைசெய்யப்பட்டன.

விவசாயிகள் மகிழ்ச்சி பொங்கல் பண்டிகையையொட்டி நேற்று மட்டும் பென்னாகரம் வாரச்சந்தையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் விற்பனை செய்யப்பட்டன. ஆடுகள் கூடுதல் விலைக்கு விற்கப்பட்டதால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும் இந்த வாரச்சந்தைக்கு பென்னாகரம், பாலக்கோடு உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், விவசாயிகள் காய்கறிகள், கரும்பு, தக்காளி, தேங்காய், வெல்லம் மற்றும் கால்நடைகளுக்கு தேவையான வண்ண கயிறு வகைகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். பொங்கல் பண்டிகைக்கு தேவையான பழங்கள், கரும்பு, பொங்கல் பானைகள், மஞ்சள், வண்ண, வண்ண பொடிகள் மற்றும் கால்நடைகளுக்கு தேவையான அலங்கார கயிறுகள் உள்ளிட்ட பொருட்களை ஏராளமான பொதுமக்கள் சந்தைக்கு வந்து ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். இதனால் நேற்று பென்னாகரம் வாரச்சந்தை விறுவிறுப்பாகநடைபெற்றது.

நல்லம்பள்ளி

இதேபோன்று நல்லம்பள்ளி வாரச்சந்தையிலும் பொங்கல் பண்டிகையையொட்டி அதிகாலை முதலே ஆடுகள், கோழிகள், மாடுகள் விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர். இங்கு தர்மபுரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள், பொதுமக்கள் வந்து ஆடுகளை வாங்கி சென்றனர். மேலும் காய்கறிகள், பொங்கல் பானைகள், மஞ்சள் கொத்து, கரும்பு, கால்நடைகளுக்கு தேவையான அலங்கார கயிறுகள், வர்ணங்கள், கலர் பொடிகள் வியாபாரிகள் விற்பனைக்காக வைத்து இருந்தனர். இதை பொதுமக்கள், விவசாயிகள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். நல்லம்பள்ளி வாரச்சந்தையில் வழக்கத்தை விட நேற்று விற்பனைகள் படுஜோராராக நடைபெற்றது.

## திருச்செங்கோடு, மல்லசமுத்திரம் எருமப்பட்டியில் பொங்கல் பரிசு வழங்கும் விழா



எருமப்பட்டியில் பேரூராட்சி தலைவர் பாலு என்ற பாலு சாமி பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு பொருட்களை வழங்கியதை படத்தில் காணலாம்.

திருச்செங்கோடு, மல்லசமுத்திரம், எருமப்பட்டி பகுதிகளில் தமிழக அரசின் பொங்கல் பரிசு பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

திருச்செங்கோடு

திருச்செங்கோடு தேவனாங்குறிச்சி ஊராட்சியில் ரேஷன் கார்டுதாரர்களுக்கு தமிழக அரசின் பொங்கல் பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. ஊராட்சி தலைவர் ராமசாமி தலைமை தாங்கி, பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு பொருட்களை வழங்கினார். நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சுப்பிரமணியம், ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் சண்முகம் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் சுரேஷ்குமார், பூபதி, சமூக ஆர்வலர் செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மல்லசமுத்திரம்

மல்லசமுத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் வெங்கடேசபுரி, ஏரிக்காடு, காளிப்பட்டி, சின்ன கொல்லப்பட்டி, மேட்டுப்பாளையம், பீமரப்பட்டி, நந்தவனபாவடி, மானுவக்காட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள ரேஷன் கடைகளில் ரேஷன் கார்டுதாரர்களுக்கு தமிழக அரசின் பொங்கல் பரிசு பொருட்கள்வழங்கப்பட்டது.

விழாவில் மல்லசமுத்திரம் தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தலைவர் சபரி மற்றும் கூட்டுறவு சங்க நிர்வாகிகள் பொங்கல் பரிசு பொருட்களை பொதுமக்களுக்கு வழங்கினார்கள். விழாவில் மல்லசமுத்திரம் பேரூர் செயலாளர் சுந்தரராஜன், மாவட்ட கவுன்சிலர் ராணி, சொசைட்டி செயலாளர் தங்கராசு, ஜெயப்பிரகாஷ், பூத் குழந்தைவேல், அல்லி, கணேசன், திருப்பதி, காளிப்பட்டி செல்வம், பெரியசாமி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

எருமப்பட்டி

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு எருமப்பட்டி பேரூராட்சியில் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு பொருட்கள் வழங்கும் விழா நடைபெற்றது. இதையொட்டி பொதுமக்களுக்கு 1 கிலோ அரிசி, 1 கிலோ சர்க்கரை, கரும்பு மற்றும் ரூ.100 ஆகியவை வழங்கப்பட்டது. விழாவில் எருமப்பட்டி பேரூராட்சி தலைவர் பாலு என்ற பாலுசாமி கலந்து கொண்டு பரிசு பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார். இதில் பேரூராட்சி துணைத் தலைவர் செல்வராஜ், ஒன்றியக்குழு உறுப்பினர் தனசேகரன் மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கறவை மாடு, தொழில் தொடங்க 1,128 பேருக்கு ரூ.10 கோடி கடன் இந்தியன் வங்கி வழங்கியது



கறவை மாடு, தொழில் தொடங்க 1,128 பேருக்கு ரூ.10 கோடி கடனுதவியை இந்தியன் வங்கி வழங்கியது.

கடன் வழங்கும் முகாம் கும்பகோணம் மண்டல இந்தியன் வங்கி சார்பில் தொழில் கடன் மற்றும் கறவை மாடு வாங்க கடன் வழங்கும் முகாம் தஞ்சை ஜங்ஷன் கிளை இந்தியன் வங்கி வளாகத்தில் நேற்று நடந்தது. முகாமில் தஞ்சை ஈஸ்வரிநகர் கிளை உதவி பொது மேலாளர் ராதாகிருஷ்ணரெட்டி வரவேற்றார். கும்பகோணம் மண்டல இந்தியன் வங்கி துணை பொது மேலாளர் வீரராகவன் தொடக்க உரை ஆற்றினார். முகாமில் சென்னை இந்தியன் வங்கி துணை பொது மேலாளர் செல்வசேகரன் கலந்து கொண்டு இந்தியன் வங்கி வழங்கும் கடன் மற்றும் சலுகைகள் குறித்து பேசினார்.

ரூ.10 கோடி கடனுதவி பின்னர் அவர் கும்பகோணம் மண்டலத்தில் உள்ள 88 இந்தியன் வங்கி கிளைகள் சார்பில் 467 பேருக்கு தொழில் தொடங்க ரூ.3 கோடியே 28 லட்சம் மதிப்பில் கடனுதவிகளை வழங்கினார். இதே போல் கறவை மாடுகள் வாங்க 661 பேருக்கு ரூ.6 கோடியே 77 லட்சம் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார். மொத்தம் 1,128 பேருக்கு ரூ.10 கோடியே 5 லட்சம் மதிப்பிலான கடனுதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் வங்கி முதன்மை மேலாளர்கள் செல்லப்பழம், உமாமகேஸ்வரி, மேலாளர்கள் ரவிச்சந்திரன், தண்டபாணி, குணசேகரன், ராஜேஸ்வரன், ராமசாமி மற்றும் வங்கி அதிகாரிகள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் தஞ்சை ஜங்ஷன் கிளை முதன்மை மேலாளர் ஷாஜகான் நன்றி கூறினார்.